பெருநகர சென்னை மாநகராட்சி
செய்தி வெளியீடு

செ.வெ.எண். 122 நாள்: 30.08.2016

# மழைக்காலங்களில் நோய்கள் பராவமல் தடுத்திட பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் பெருநகர சென்னை மாநகராட்சியால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

---

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, மாண்புமிகு பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திரு. சைதை துரைசாமி அவர்கள் மற்றும் ஆணையர் முனைவர். தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்களின் தலைமையில் பெருநகர சென்னை மாநகராட்சி பொது சுகாதாரத்துறை சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, ஒவ்வொரு மண்டலத்திலும் அரசு மருத்துவமனை, சென்னை மாநகராட்சி மருத்துவமனை, தனியார் மருத்துவமைன மற்றும் பகுப்பாய்வு கூடங்களில் காய்ச்சல் கண்டவர்களின் விவரங்கள் தினந்தோறும் பெறப்பட்டு சம்பந்தபட்ட மண்டலங்களுக்கு உடன் அனுப்பி உரிய சுகாதார ஆய்வாளர்களுக்கு தெரிவிக்கப்பட்டு கொசு தடுப்பு மற்றும் விழிப்புணர்வு சம்பந்தமான நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. மருத்துவமனைகளில் காய்ச்சல் கண்டவர்களுக்கு உரிய சிகிச்சை அளிக்கப்படுகிறதா என கண்காணிக்கப்படுகிறது.

சென்னையில் உள்ள சுமார் 17 லட்சம் வீடுகளின் பகுதிகளை சிறு வட்டங்களாக (Sector) பிரிக்கப்பட்டு ஒவ்வொரு வட்டத்திற்கும் சுமார் 500 வீடுகள் கொண்ட தெருகளில் வாரந்தோறும் கொசு புழு வளரிடங்களான, மேல்நிலை/கீழ்நிலைத் தொட்டி, கிணறு, தேவையற்ற பொருள்கள் (டயர்கள், உடைந்த பிளாஸ்டிக் குடங்கள் மற்றுமுள்ளவைகள்) ஆகியவற்றை கண்டறிந்து கொசு புழுக்கள் இருப்பின் அதனை அழித்து வருகின்றனர். மேலும் காலை மற்றும் மாலை நேரங்களில் குடிசைபகுதிகள், பள்ளிகள், மக்கள் நாடமாட்டம் அதிகம் உள்ள இடங்களில் மற்றும் மழைநீர்வடிகால் கால்வாய்களில் 42 வாகனங்களில் பொருத்தப்பட்ட பெரிய புகைபரப்பும் இயந்திரங்களை கொண்டும் , 365 கையினால் எடுத்துச்செல்லும் புகைபரப்பும் இயந்திரங்களை கொண்டும் தினசரி புகை பரப்பும் பணியும், 568 கைத்தெளிப்பான் கொண்டும் கொசுப்புழு மற்றும் முதிர்ந்த கொசுக்களை அழிக்கும் பணியும் நடைபெற்று வருகிறது.

அரசு மற்றும் மாநகராட்சி கட்டிடங்கள், புதிய கட்டுமான பணிகள் நடைபெறும் இடங்களிலும் கொசுப்புழுக்கள் இடங்கள் கண்டறியப்பட்டு அழிக்கப்பட்டு வருகின்றன. டெங்கு கொசு உற்பத்தியாக கூடிய நண்ணீர் தேங்கிய இடங்களிலும், டயர்கள் மற்றும் உபயோகமற்ற பொருட்களை அப்புறப்படுத்தி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும் தற்போது உள்ள பருவமழை முன்னிட்டு அனைத்து பள்ளிகள், பூங்காக்கள், அரசு கட்டிடங்களில் உள்ள தேவையற்ற மழைநீர் தேங்கும் பொருட்களை அப்புறப்படுத்தப்பட்டுள்ளது.

இந்திய மருத்துவ முறை பாரம்பரிய மருந்துகளான நிலவேம்பு குடிநீர், பப்பாளி இலைச்சாறு மற்றும் மலை வேம்பு இலைச்சாறு போன்றவை அம்மா உணவகங்களிலும், ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், பள்ளிகள் மற்றும் மருத்துவ முகாம்களிலும் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றது.

அதிக காய்ச்சல் கண்ட இடங்களில் சிறப்பு மருத்துவ முகாம் நடத்தப்பட்டு, இரத்த தடவல் எடுக்கப்பட்டு உரிய சிகிச்சை இலவசமாக அளிக்கப்பட்டு வருகின்றன. பொதுமக்களுக்கு டெங்கு காய்ச்சல் பற்றியும், ஏடிஸ் கொசு உற்பத்தி பற்றியும், அது தடுக்கும் வழிமுறைகள் மற்றும் விழிப்புணர்வு குறித்து துண்டு பிரசுரங்கள் மற்றும் துண்டறிக்கைகள் மூலம் விநியோகிக்கப்பட்டுள்ளன. பெருநகர சென்னை மாநகராட்சி பொதுசுகாதாரத்துறை மழைக்காலங்களில் வரக்கூடிய நோய்களை எதிர்க்கொள்ள போதிய அளவு மருந்துகள்,உபகணரங்களுடன் பணியாளர்கள் தயார் நிலையில் உள்ளனர்.

காய்ச்சல் அனைத்தும் டெங்கு காய்ச்சல் அல்ல. காய்ச்சல் இருந்தால் உரிய மருத்துவர்களிடமும், அரசு மற்றும் மாநகராட்சி மருத்துவமனைகளிலும் சென்று உரிய சிகிச்சை பெற அறிவுறுத்தப்படுகிறது. அரசு மருத்துவமனைகளிலும் மற்றும் குறிப்பிட்ட தனியார் மருத்துவமனைகளிலும் டெங்கு காய்ச்சல் என உறுதிப்படுத்தக்கூடிய இரத்த தகவல் அறிக்கை (ELISA TEST) மேற்கொள்ளப்படுகிறது. ஆகையால் பொது மக்கள் டெங்கு காய்ச்சல் குறித்து அச்சம் கொள்ள வேண்டாம் என கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**செய்தி வெளியீடு : துணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**